2015 செப்டம்பர் 16] [பேரவைத் தலைவர்]

புனிதமிக்கப் பேரவையில், புரட்சிகரத் தீர்மானம் இயற்றி, போர்க் குற்ற விசாரிப்பும், புரட்டாளர்களுக்குத் தண்டனையும் பெற்றுத் தர புரட்சிக் குரல் ஒலிக்கும் புறநானூற்றின் புது வடிவே, மாண்புமிகு அம்மா அவர்களே! (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் வீரத்திற்குப் பின்னே அணி வகுக்குது தமிழகமே! (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை தமிழகமே அணிவகுத்து வரவேற்கிறது. இன்று உலக ஓசோன் பாதுகாப்பு நாள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியிலே என்றைக்கும் தமிழர்கள் அனைவருக்கும் பாதுகாப்புதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளோடு என்னுடைய கருத்தையும் தெரிவித்துக்கொண்டு, வரவேற்கிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

முற்பகல் 11-45

3. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து. . . (குறுக்கீடுகள்)

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

***திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நல்லதொரு தீர்மானம், அவையிலே நிறைவேறியிருக்கிறது. அவையில் அனைவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அவையில் அனைவரும் சந்தோஷமாக இருக்கிறார்கள். (குறுக்கீடுகள்) அடுத்த அலுவலுக்குப் போகலாம். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சந்தோஷமாகத்தான் சொல்கிறேன். நாங்கள் கொடுத்த அறிவிப்புகளெல்லாம் ஆய்விலே இருக்கிறதே; அந்த ஆய்வுகள் முடிந்ததா? எப்பொழுது முடியும்?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். இன்றைக்கு உங்களுடைய கட்சி உறுப்பினர் கொடுத்திருப்பதைத்தான் எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு)*

திரு. துரைமுருகன்: *எப்பொழுது ஆய்வு செய்வீர்கள்? என்ன ஆய்வு செய்கிறீர்கள்? அதை ஆராய்ச்சி செய்திருந்தால் நீங்கள்* Doctorate *வாங்கியிருக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்வதைக் கேளுங்கள். இன்றைக்குக்கூட உங்களுடைய கட்சி உறுப்பினர் கொடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பினைத்தான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) 'உங்களுடையது' என்றால், உங்களுடைய கட்சி உறுப்பினருடையதுதான். (குறுக்கீடு) திரு. அ. சௌந்தரபாண்டியன், உங்களுடைய கட்சி உறுப்பினர்தானே? (குறுக்கீடு) அவர் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்பினைத்தான் நான் எடுத்திருக்கிறேன்.*

4. கவன ஈர்ப்பு

லால்குடி, பாரதிதாசன் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிக்குக் கட்டடம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்தரபாண்டியன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உயர் கல்வித்*